**சீனா அபிவிருத்தி வங்கி நிதியளிக்கப்பட்ட முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் 3- (கட்டம் II) 2015**

---

சீனா அபிவிருத்தி வங்கி நிதியளிக்கப்பட்ட முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் 3- (கட்டம் II) இன் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இச் செயற்திட்டமானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சீனா அபிவிருத்தி வங்கிக் கூட்டுத்தாபனத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 நவம்பர் 24 ஆந் திகதிய 4510201401100000587 ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் கீழ் அமுலாக்கப்படுகின்றது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன

---

செயற்திட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. அப்பகுதியில் வாசிக்கின்ற மக்களிற்கு முக்கியமான அணுகுவழி மற்றும் சமூக மற்றும் பொருளாதார நன்மைகளை வழங்குகின்ற தென் மாகாணத்திலுள்ள 10 தேசிய மற்றும் மாகாண வீதிகளின் 105 கிலோமீற்றரை புனர்நிர்மாணம் மற்றும் புனரமைப்பை செய்வதே செயற்திட்டத்தின் ஆரம்ப குறிக்கோளாகும். எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நோக்கெல்லை கண்டி மற்றும் கேகாலை மாவட்டங்களில் 09 தேசிய வீதிகளின் 80.60 கிலோமீற்றர் மற்றும் கண்டி மாவட்டத்தில் 11 கிராமிய வீதிகளின் 48.25 கிலோமீற்றர் என்பவற்றினை புனர்நிர்மாணம் செய்துவதும் புனரமைப்பதுமாக பின்னர் மாற்றியமைக்கப்பட்டிருந்தது. கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 15,594.14 மில்லியனிற்கு சமமான யூஎஸ்.டொலர் 117.66 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 13,253 மில்லியனிற்கு சமமான யூஎஸ்.டொலர் 100 மில்லியன் சீனா அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக

நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர்களின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிலுள்ள தாமதம்**

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய எம்ஓஎவ்டி/ஈஆர்டி/2007/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், 2016 மார்ச் 31 அன்று அல்லது அதற்கு முன்னர் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டிருந்த மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2016 நவம்பர் 02 இலேயே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதிகளின் பயன்பாடு**

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின் போது மற்றும் முதலாவது மீளாய்வு காலப்பகுதியின் போதான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் வசதி உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒடுக்கீடு | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|
| | யூஎஸ். டொலர் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | யூஎஸ். டொலர் | மில்லியன் |
| சீனா அபிவிருத்தி வங்கி கூட்டுத்தாபனம் | 100.00 | 13,253.00 | - | - | - |
| இலங்கை அரசாங்கம் | 17.66 | 2,341.14 | 25.50 | - | 22.81 |
| மொத்தம் | 117.66 | 15,594.14 | 25.50 | - | 22.81 |

## 3.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், தென் மாகாணத்தில் 10 தேசிய மற்றும் மாகாண வீதிகளின் 105 கிலோ மீற்றர்களை புனரமைப்பதற்கு 2013 மே 28 இல் சீனா அபிவிருத்தி வங்கிக் கூட்டுத்தாபனத்துடன் புரிந்துணர்வு விஞ்ஞாபனமொன்று கைசாத்திடப்பட்டது. ஆகவே, ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள வீரகெட்டிய- மெததெனிய வீதியின் 12.87 கிலோ மீற்றர்கள் மற்றும் தங்காலை – வீரகெட்டிய வீதியின் 14.48 கிலோ மீற்றர்கள் என்பவற்றின் புனரமைப்பு வேலைகள் 2014 இல் தொடங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அமைச்சரவை அத்தகைய வீதிகளின் புனரமைப்பு வேலைகளை இடைநிறுத்துவதற்கு 2015 யூன் 17 இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. பின்னர், அமைச்சரவை வேலைகளின் நோக்கெல்லையை மாற்றுவதற்கும் கண்டி மற்றும் கேகாலை மாவட்டங்களில் 09 தேசிய வீதிகளின் 80.60 கிலோமீற்றர்கள் மற்றும் கண்டி மாவட்டத்தில் 11 கிராமிய வீதிகளின் 48.25 கிலோமீற்றர்கள் என்பவற்றினை புனரைப்பதற்கு 2016 ஏப்ரல் 20 இல் தீர்மானித்தது. எவ்வாறாயினும், அத்தகைய வீதிகளின் புனரமப்பு வேலைகள் 2016 திசெம்பர 31 வரையிலும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. ஆதலால், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் காலத்திற்கு காலம் மாற்றப்பட்டிருந்தமையால் நாட்டின் மேம்பாட்டிற்காக உரிய காலத்தில் கடன் பெறுகைகளை பயன்படுத்துவதிலுள்ள ஆபத்தினை கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது என சான்றுபடுத்தியது.

(ஆ) அறிக்கையின் முந்திய பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு, 2014 இல் வெளிநாட்டு கம்பனியொன்றிற்கு தங்காலை – வீரகெட்டிய வீதி மற்றும் வீரகெட்டிய- மெததெனிய வீதியின் புனரமைப்பிற்கான ஒப்பந்தங்கள் 2015 யூனில் இடைநிறுத்தப்பட்டிருந்தது. ஆகவே, தங்காலை – வீரகெட்டிய வீதியின் 14.48 கிலோமீற்றரில், 1.96 கீலொமீற்றர வீதிகளின் புனரமப்பு வேலைகள் பூர்த்தியாக்க வேண்டியிருந்ததுடன் அவற்றின் ஒப்பந்தகாரருக்கு ரூபா 163 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 3.3 முரணான செலவினங்கள்

------------------------------------

ஹம்பாந்தோட்டையில் நடைபெற வேண்டுமென பட்டியலிடப்பட்ட உத்தேசிக்கப்பட்ட தேசிய சுதந்திர தின விழா கொண்டாட்டங்களுடன் சேர்த்து தென் மாகாணத்தின் சகல வீதிப் புனரமைப்பு வேலைகளும் 2014 இல் மேற்கொள்ளப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. ஆகவே, தங்காலை – வீரகெட்டிய வீதி மற்றும் வீரகெட்டிய-மெதெனிய வீதியின் புனரமைப்பு வேலைகளும் உரிய தரப்பினரிடமிருந்து முறையான அனுமதியை பெற்றுக்கொள்ளாமல் ரூபா 72.61 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2014 இல் தேசிய சுதந்திர தின விழா கொண்டாட்டம் வேறொரு நிகழ்ச்சியாக நடைபெற்றிருந்தமையால் வீதிப் புனரமைப்பு வேலைகளில் ஏற்பட்ட மேலதிக கிரயம் பயனற்றதாக இருந்ததென அவதானிக்கப்பட்டது.